**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM**

| | | | |
|---|---|---|---|
| **D.W.1** | **பெயர் : திரு. கோபால்**<br>**க/பெ : திரு. பாண்டி** | **O.S.No. 10/2023** | **17.04.2026** |

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, வாதி தரப்பில் பி.வா.சா.1 ன் குறுக்கு விசாரணை)

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதியை எனக்கு தெரியும். அவருடைய கணவர் ஜார்ஜ் வின்சென்டை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சாத்தான்குளம் தாலுகா சர்வே எண்.335/2E ல் 3 ஏக்கர் நிலம் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி இடம் ஆரம்ப காலத்தில் சிவகாமி நாதபிள்ளை வாரிசுகளான ஆறுமுக சுந்தரம்பிள்ளை மற்றும் அவரது வாரிசான சிவகாமிநாதபிள்ளை, அவருடைய சகோதரர்களான நாராயணபிள்ளை மற்றும் கோபாலகிருஷ்ணபிள்ளை ஆகியோர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். மேற்படி நபர்களுக்கிடையே 23.03.1994 ஆம் வருடம் ஒரு பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

நாராயணபிள்ளை என்பவரின் அதிகாரம் பெற்ற முகவர் நான் தான் என்று சொன்னால் சரிதான். நாராயணபிள்ளை எழுதிக் கொடுத்த அதிகார ஆவணம் என்னிடம்தான் உள்ளது என்று சொன்னால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை, என்னிடம் இருந்தால் நான் தாக்கல் செய்ய தயாரா என்றால் நான் தயார். சாத்தான்குளம் கிராமம், சர்வே எண்.335 ன் வில்லங்க சான்றிதழ்தான் என்னிடம் காட்டப்படுகிறது என்று சொன்னால் சரிதான். **மேற்படி வில்லங்க சான்றிதழை இந்நீதிமன்றத்தால் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 23.03.1994 தேதிய சாத்தான்குளம் சார்பதிவக பதிவு எண்.345/1994 ன் அடிப்படையில்தான் நாராயணபிள்ளை எனக்கு அதிகார ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது 23.03.1994

தேதியிட்ட சாத்தான்குளம் சார்பதிவக பதிவு எண்.345/1994 ஆவணம்தான் என்று சொன்னால் சரிதான். **மேற்படி 23.03.1994 தேதியிட்ட சாத்தான்குளம் சார்பதிவக பதிவு எண்.345/1994 ஆவணம் இந்நீதிமன்றத்தால் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணத்திலும் எனது மகளுக்கு நான் எழுதிக் கொடுத்த சாத்தான்குளம் சார்பதிவக ஆவண எண்.427/2010 ஆவணத்திலும் சர்வே எண்.335/2E ல் 3 ஏக்கர் இடம்தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி சாத்தான்குளம் சார்பதிவக ஆவண எண்.427/2010 ஆவணத்தின் அடிப்படையில்தான் எனது மகள் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை 1ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான், மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்திலும் 3 ஏக்கர் இடம்தான் காண்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். சர்வே 335/2E ன் 4 பக்க எல்கைமால்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தென்புறத்தில் சர்வே எண்.335/2F1 உள்ளது. வடபுறத்தில் சர்வே எண்.335/2C உள்ளது. மேற்குப்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் குளம் உள்ளது. தென்புறத்தில் சர்வே எண்.335/2F1 உள்ளதாக நான் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சர்வே எண்.335/2E ன் தென்மேற்குப் பகுதியில் அருமநேரி குளத்தில் மறுகால்மடை உள்ளது என்றால் சரியல்ல. அருமநேரி குளத்தில் மறுகால்மடை உள்ளது என்று சொன்னாலும் நான் வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. சர்வே எண்.335/2F1 ன் வடபுற எல்லையில் அருமநேரி குளத்தின் மறுகால் ஓடை உள்ளது என்றாலும் தண்ணீர் இல்லாத சமயத்தில் அந்த வழியாக சுந்தர்ராஜ், முருகன், துரை, சந்திரபோஸ் ஆகியோர்கள் தங்கள் விவசாய நிலங்களுக்கு செல்வார்கள் என்றாலும் சரியல்ல. மழைகாலங்களில் சர்வே எண்.335 முழுவதும் மழை தண்ணீர் தேங்கிக் கிடக்கும் என்றால் சரியல்ல.

புல எண் 335/2E க்குரிய பட்டா என்னிடம் காட்டப்படுவதுதான். **மேற்படி புல எண் 335/2E க்குரிய பட்டா இந்நீதிமன்றத்தால் வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் புல வரைபடமானது சர்வே எண். 335/2E க்குரியது என்று சொன்னால் சரிதான். **மேற்படி** சர்வே எண். **335/2E க்குரிய புலவரைபடம் இந்நீதிமன்றத்தால் வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பொதுவாக நான் இடங்கள் வாங்கி விற்பனை செய்வேன் என்றால் சரிதான். நான் பொதுவாக ஒரு இடத்தை வாங்கும்போது இடத்தை அளந்துபார்த்துதான் வாங்குவேன் என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு நாங்கள் இடத்தை விற்கும்போது அளந்து காண்பித்துதான் இடத்தை விற்றோமா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி தபசில் சொத்தினை பார்க்க வந்தாரா என்றால் வந்தார். 1ம் பிரதிவாதியை நான் எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க தயாரா என்றால் தயார்.

சர்வே எண்.335/2E க்குரிய புலவரைபடத்தின் மேற்குப் பக்கத்தில் 84.2 மீட்டர் இடம் உள்ளது என்றால் சரிதான். கீழ்புறத்தில் 75.2 மீட்டர் இடம் உள்ளது என்றால் சரிதான். வடபுறத்தில் 167.4 மீட்டர் இடமும் தெற்குப்புறத்தில் 148.8 மீட்டர் இடமும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 4 பக்க இடங்களையும் சேர்த்தால் மொத்தமாக 3 ஏக்கர் 11 செண்ட் இடம் உள்ளது என்றால் சரியல்ல. 4 பக்க இடங்களையும் சேர்த்தால் மொத்தமாக 3 ஏக்கர் 11 செண்ட் இடம் உள்ளது என்று சொன்னாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்ற சொன்னாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் மொத்தமாக 3 ஏக்கர் 11 செண்ட் இடம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல, 3 ஏக்கர் இடம் மட்டுந்தான் உள்ளது. 3 ஏக்கர் இடம் மட்டுந்தான் உள்ளது என்று சொன்னாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு அவர் சர்வே எண்.335/2E இடத்தை அளந்தாரா என்றால் அளந்தார். இடத்தை அளப்பதற்கு யார் மனுதாக்கல் செய்தார் என்றால் 1ம் பிரதிவாதி

கொடுத்தார். மேற்படி இடத்தைஅளந்த போது நான் உடன் இருந்தேனா என்றால் இருந்தேன். இடத்தை அளந்தபோது 1ம் பிரதிவாதிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் அவருக்கு நிலத்தை அளந்தது சம்பந்தமாக எந்த ஒரு தகவலும் தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில்தான் இடம் அளக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

எனது மகள் 29.06.2022 தேதியன்று சர்வே எண்.335/2E ல் கண்டுள்ள இடத்தை விற்றுவிட்டார் என்று சொன்னால் சரிதான். அப்போது எனது மகள் முழு கிரையத் தொயையும் பெற்றுவிட்டார் என்று சொன்னால் சரிதான். நான் சாத்தான்குளம் காவல் நிலையத்தில் 24.01.2023 தேதியில் ஒரு புகார் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவை நான் கொடுத்தபோது 1ம் பிரதிவாதி என்னுடன் காவல் நிலையத்திற்கு வந்திருந்தாரா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சர்வே எண்.335/2E ஐ பொறுத்தமட்டில் சொத்து விவரத்தில் எல்கைமால்களை காண்பிக்காமல் விட்டதற்கு தனிப்பட்ட காரணங்கள் உண்டா என்றால் கிடையாது.

பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில்பக்கம் 5ல் "இந்த ஆவணத்தில் கண்ட சொத்தானது நீர்நிலைகள், நீர்வழிப்பாதைகள், நீர்பிடிப்பு பகுதிகளில் கட்டுப்படவில்லை என சான்றளிக்கிறோம். மேலும் இதனில் தங்களுக்கு தவறான தகவல் அல்லது சான்று அளிக்கப்பட்டதாக பின்னாளில் கண்டுபிடிக்கப்பட்டால் அதனால் நான்/நாங்கள் சட்ட பூர்வ நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவோம் என்பதையும் அறிவேன்/அறிவோம்" என்று கண்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அதில் 1ம் பிரதிவாதியும் எனது மகளும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். சர்வே எண்.335/2E ன் மேற்குப்புற எல்கையிலும் கிழக்குப்புற எல்கையிலும் குளங்கள் இருப்பதால்தான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விவரத்தில் நான் அதில் காண்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள 3 ஏக்கர் இடத்தைவிட கூடுதலாக 11 செண்ட் இடம் பி.வா.சா.ஆ.2

ஆவணத்தில் காண்பிக்கப்பட்டுள்ளதால் அதைப்பொறுத்து நானும், 1ம் பிரதிவாதியும் வாதியின் பிராது தபசில் சொத்திற்கு இடைஞ்சல் செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல.

வாதிக்கு சர்வே எண்.335/2F1ல் 1 ஏக்கர் 20 செண்ட் நிலம் வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. சாத்தான்குளத்தில் உள்ள தெற்கு ரதவீதியில் குடியிருக்கும் வைரவநாதபிள்ளையை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வைரவநாதபிள்ளையின் மகன் ராதாகிருஷ்ணனை எனக்கு தெரியுமா என்றால் தெரியும், நான் முன்பு பார்த்துள்ளேன். வைரவநாதபிள்ளையின் மனைவி திருநாவுக்கரசம்மாள் வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் வாதிக்கு வா.சா.ஆ.2 ஆவணத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. திருநாவுக்கரசம்மாள் ராதாகிருஷ்ணன் என்பவருக்கு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் ஏற்படுத்தினார் என்று சொன்னாலும், திருநாவுக்கரம்மாள் இறந்த பிறகு அது நடைமுறைக்கு வந்தது என்று சொன்னாலும் அந்த உயில் ஆவணத்தின் அடிப்படையில் வா.சா.ஆ.2 ஆவணத்தை ராதாகிருஷ்ணன் வாதிக்கு எழுதிக் கொடுத்தார் என்று சொன்னாலும் சரியல்ல, உயில் ஆவணம் மோசடியாக தயாரிக்கப்பட்டது. மேற்படி சங்கதிகளை எனக்கு தெரியும் என்று சொன்னாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

சர்வே எண்.335/2F1, சர்வே எண்.335/2E இடங்களுக்கு அருகில் உள்ள வேறு சர்வே எண்ணில் எனக்கு தோட்டங்கள் உள்ளது என்று சொன்னால் சரிதான். வாதி இந்த வழக்கு சொத்தைத் தவிர வேறு இடங்களில் தனக்கு பாத்தியப்பட்ட கிணற்றில் இருந்து தண்ணீர் பாய்ச்சி விவசாயம் செய்து வருகிறார் என்று சொன்னால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. வாதி வழக்கு சொத்தில் சுமார் 1000 வாழைகள் பயிர் செய்து விவசாயம் செய்து வருகிறார் என்றும் மீதி இடத்தில் ஆஸ்பெஸ்டாஸ் அமைத்து மாடுகள் வளர்த்து வருகிறார் என்று

சொன்னாலும் சரியல்ல. மேற்படி சங்கதிகளை எனக்கு தெரியும் என்று சொன்னாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

பிராது தபசில் சொத்தில் வடமேற்குப்புறத்தில் உள்ள மறுகால் ஓடையின் பொழியில் வாதிக்கு சொந்தமான உடைமரங்களையும் வடபுறப்பொழியினையும் ஆக்கிரமித்து கொள்ள 2.03.2023 தேதி முதல் நானும் 1ம் பிரதிவாதியும் முயற்சி செய்து வந்தோம் என்றால் சரியல்ல. நாங்கள் இடையூறு செய்ததால் வாதி காவல் நிலையத்தில் புகார் அளித்தார் என்று சொன்னாலும் அது சிவில் வழக்கு என்பதால் நீதிமன்றம் சென்று பார்த்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. 24.01.2023 தேதியில் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் அளிக்கவில்லை. 29.09.2021 தேதியில் இரவு 9.45 மணியளவில் காவல் நிலையத்தின் வெளியில் வைத்து வாதியையும் வாதியின் கணவரையும் மிரட்டி 1000 வாழைகளை அழித்து விடுவதாகவும் கொலை செய்து விடுவதாகவும் மிரட்டியதால் வாதி 30.01.2023 தேதியில் தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களுக்கு பதிவு தபாலில் புகார் மனுவை அனுப்பினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விசாரணைக்கு நான் காவல் நிலையம் சென்றேன் என்று சொன்னாலும் அப்போது வாதியின் அனுபவத்திற்கு நான் எவ்வித இடையூறும் செய்யமாட்டேன் என்று எழுதிக்கொடுத்தேன் என்று சொன்னாலும் சரியல்ல.

பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் 1ம் பிரதிவாதி சோலார் பவர் பிளாண்ட் அமைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. எந்த சர்வே எண்ணில் 1ம் பிரதிவாதி சோலார் பவர் பிளாண்ட் அமைத்துள்ளார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் வழக்கு சொத்திற்கு எப்போது சென்றேன் என்று கேட்டால் 4 நாட்களுக்கு முன்பாக சென்று வந்தேன். வா.சா.ஆ.6 ல் கண்டுள்ள புகைப்படத்தில் சோலார் பவர் பிளாண்ட் அமைத்தமாதிரிதான் உள்ளதா என்றால் உள்ளது, அதற்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் கிடையாது. அந்த படத்தில்

மறுகால் மடை காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மறுகால் மடை உள்ளது என்று சொன்னாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

என்னிடம் காண்பிக்கப்படும் கிரைய ஒப்பந்த ஆவணத்தில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்று சொன்னால் சரிதான், **மேற்படி கிரைய ஒப்பந்தம் இந்நீதிமன்றத்தால் வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி ஆவணத்தின் 3வது பக்கத்தில் 2வது சாட்சியாக ராதாகிருஷ்ணன் என்பவர் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். முதல் சாட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஒப்பந்த ஆவணத்தில் வாதியின் கணவரும், வைரவநாதபிள்ளை குமாரர் ராதாகிருஷ்ணன் என்பவரும் கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

பிராது தபசில் சொத்தினை சுப்ரமணியன் என்பவருக்கு கிரையம் கொடுக்க நாங்கள் வாதியிடம் கேட்டோம் என்று சொன்னாலும் அவர் மறுத்து விட்டதால் நாங்கள் தொடர்ந்து அவருடைய அனுபவத்திற்கு இடையூறு செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

(Sd) M. Siva Rajesh, 17/04/2026
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.